


விடியல் மாத இதழ் (தனிச்சுற்றுக்கு மட்டும்)
வெளியீடு: தமிழ்த்துறை
கே.எஸ். ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு - 637 215, தமிழ்நாடு, இந்தியா.
*fb* : facebook.com/ksrcasthamizh.vidiyal
*Blog* : *ksrcasthamizh.blogspot.in*
*Email* : *vidiyalmagazhine@gmail.com*
*Website* : *ksrcas.edu*

SUN Printer தி.கோடு. 97500 20222

# விடியல்

THE DAWN மாத இதழ்

பொழுது - 92
டிசம்பர் 2016



# விடியல்

The Dawn

இதழ்-92, டிசம்பர்-2016



**கௌரவ ஆசிரியர்**

**முனைவர் வே. இராதாகிருஷ்ணன்**
கல்லூரி முதல்வர்

**ஆசிரியர்**

**முனைவர் சி.ரா. சுரேஷ்**
துறைத்தலைவர்

**இணையாசிரியர்**

**திரு. செ. தங்கராஜ்**

**ஆசிரியர் குழு**

திரு .வீரா. முருகானந்தம்
முனைவர் த. கண்ணன்
திருமதி. சு. சாந்தி
திரு. ப. ராஜேஷ்
முனைவர் து. சரஸ்வதி
முனைவர் பா. ராஜேஷ்
முனைவர் கோ. இரவிச்சந்திரன்
முனைவர் ம. லோகேஷ்வரன்
திரு. மு. சதீஸ்குமார்
முனைவர் சு. முப்பிடாதி
முனைவர் ப. பிரதீபா
திரு. மு. சத்தியராஜ்
முனைவர் ப. சிலம்பரசன்
திரு. ந. சரவணன்


## தலையங்கம்

### இருண்டு போன விவசாயம்

ஒரு மனிதன் தன்னுடைய உடம்பில் உடுக்கும் உடை, தனக்கென தனியான ஒரு வசிப்பிடம் இல்லாமல் கூட உயிர் வாழ்ந்து விடலாம். ஆனால், ஒருவன் உணவில்லாமல் எப்போதும் வாழ இயலாது என்பது நாம் அறிந்ததே.

ஏன் மனிதன் மட்டுமின்றி இவ்வுலக உயிர்கள் அனைத்துமே உணவின்றி வாழ இயலாது. ஆக உணவு என்பது அனைத்து உயிர்களுக்கும் அவசியமானதாகும்.

இன்றைய சமுதாயம் பணம் இருந்தால் எதை வேண்டுமானலும் சாதித்து விட இயலும் என்ற பெருமிதத்தில் மார்தட்டிக் கொண்டிருக்கிறது. பணத்தால் அரிசி, பருப்பு போன்ற உணவுப் பொருட்களை வாங்க இயலுமே தவிர அதனை விளைவிக்க இயலாது.

கடந்த காலங்களில் முப்போகம் விளைவித்த உழவனால் இன்று ஒரு போகம் கூட விளைவிக்க முடியாத சூழல் உருவாகியுள்ளது ஏன்?


© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)



வெளியீடு:

**தமிழ்த்துறை**

**கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி**(தன்னாட்சி)
**திருச்செங்கோடு-637 215. தமிழ்நாடு, இந்தியா.**

**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal
**Blog:** ksrcasthamizh.blogspot.in **E-mail:** vidiyalmagazhine@gmail.com
**Website:** ksrcas.edu



All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publishe

நமது தேவைகளுக்காக இயற்கை வளங்களை அழித்துக் கொண்டே வருகிறோம். இயற்கை அழிய அழிய மழை வளம் குறைந்து கொண்டே செல்கிறது. இந்த ஆண்டு அக்டோபர் 1 முதல் டிசம்பர் 31 வரை சராசரியாக 440 மி.மீ அளவு வடகிழக்குப் பருவமழை பொழிந்திருக்க வேண்டும். ஆனால் வழக்கத்திற்கு மாறாக 168.3 மி.மீ அளவுதான் மழை பொழிந்திருக்கிறது. 40 ஆண்டுகளுக்கு முன்னர் தான் இப்படி மழையின் அளவு மிகக் குறைந்து காணப்பட்டது.

இந்த ஆண்டு பருவ மழை பொய்த்துப்போனதால் டெல்டா மாவட்டங்கள் உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றன. அதுமட்டுமின்றி அண்டை மாநிலங்களான கர்நாடகா, ஆந்திராவில் இருந்து கிடைக்கப்பெறும் தண்ணீரும் முறையாக வந்தடையவில்லை.

அவ்வப்போது உச்சநீதிமன்றத் தீர்ப்பால் கிடைத்த காவிரி நீரைப் பயன்படுத்தி விளைச்சலைத் தொடங்கிய விவசாயிகள் மழை பெய்தால் அறுவடையை முடித்துவிடலாம் என்றிருந்த நிலையில் வானம் பொய்த்துப் போனது. விவசாயப் பயிர்கள் வாடியதைக் கண்ட விவசாயிகள் தங்களது உயிரையே மாய்த்துக்கொள்ளும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவர்களின் இறப்பிற்கு முழுக்க முழுக்க நாமே பொறுப்பு! இதனைத் தடுக்க இயற்கையைப் பேணுதல், நீர் நிலைகளை அதிகமாக உருவாக்குதல், உருவாக்கிய நீர் நிலைகளைப் பராமரித்தல் போன்றவைகளை இவ்வரசும், ஒவ்வொரு தனிமனிதனும் முன்வந்து செய்ய வேண்டும்.

இணையாசிரியர்

# உள்ளுறை


சுனாமி தினம்----------------------------------4-8

உலக எய்ட்ஸ் தினம்-----------------------8-9

ஊனமுற்றோர் தினம்------------------------9-9

உலக மாசு தினம்--------------------------10-11

உலக மனித உரிமை நாள்-----------11-12

உலக அமைதி நாள்---------------------12-13

விவசாயிகள் தினம்------------------------14-20

**பொதுக் கவிதைகள்**--------------------------20-26

**கட்டுரைகள்**----------------------------------------26-28

**சிறுகதைகள்**--------------------------------------29-32

# சுனாமி தினம்

## ரகசியம்

உலகின் முதல்
அதிசயம்
சத்தமிடும்
ரகசியம்...!

கால வெள்ளம்
தேங்கி நிற்கும்
நீலப் பள்ளம்
வாசிக்கக்
கிடைக்காத
வரலாறுகளைத்
தின்று செரித்து
நின்று சிரிக்கும்
நிஜம் கடல்...!

ஒரு வகையில்
நம்பிக்கை
ஒரு வகையில்
எச்சரிக்கை...!



ச. அகிலாண்டேஸ்வரி
மின்னணு மற்றும் தொடர்பியல் துறை - முதலாமாண்டு

## விடை தெரியாத புதிர் நீ!

அளவில்லா பொக்கிஷத்தை
தன்னுள் கொண்ட கடல் தேவதையின்
ருத்ரதாண்டவம் சுனாமி!

உலகின் அனைத்து மானுடர்களையும்
திரும்ப வைத்த கடல்தாயின்
செயல்தான் சுனாமி!

கரையோரம் கொஞ்சி, சிணுங்கி
விளையாடிய பிஞ்சு பாதங்கள்
அன்று கடல் தேவதையின்
மடியில் உறங்கச் சென்ற நாள்!

அமைதியாய், ஆரவாரம் இல்லா
ஓசை எழுப்பி எண்ணிலடங்காச்
செல்வங்களையும்
தன்னுள் அடக்கிக் கொண்டவள்
நீ! ஆனால்
எங்கள் மேல் உனக்கு கோபமா?
இல்லை பாசமா?

ஒரு லட்சம் உயிர்களை கொன்ற
கடல் அன்னையே!
ஏன் இந்தக் கோர தாண்டவம்?
உன்னுள் கொண்ட முத்துகளின்
எண்ணிக்கை குறைந்ததோ!
இம்முத்துகளை உன்னுள் கொண்டு
சென்றாய்!

விடை தெரியாமல் இன்று
உன்முன் நாங்கள்!
கண்ணீருடன் உறவினர்கள்!

மு. பவித்ரா
துகிலியல் மற்றும் ஆடை வடிவமைப்புத்துறை - முதலாமாண்டு

- மூன்று மணி நேரத்துக்கு ஒரு முறை சாப்பிடவும்.
- ஒவ்வொரு முறை சாப்பிடும்போதும் வயிறு முட்ட சாப்பிடக் கூடாது.

# இயற்கையின் கோபம்!

எப்போது நான் உன்னைப் பார்த்தாலும்
புன்னகை பூக்கும்
உன் முகத்தில் முதன் முதலாய்
கோபத்தைப் பார்த்த பொழுது தான்
எனக்குக் கோபத்தின் மீதே
முதன் முதலாய்
கோபம் வந்தது

வீழ்வதும் அழகே-
நீரருவியாய் இருந்தால்
தலை தாழ்வதும் அழகே!

அலைகடலாய் உன்னைக்
காணும் போது
உன் சிதறல்கள் அழகே!

அழகின் உருவாய்
இருப்பதை எல்லாம்
அழிவின் உருவாய்
பார்ப்பது உனது பிழையோ?
அல்லது
மனிதா!

நீயே
இயற்கையின் இலக்கணப் பிழையோ??

**தொகுப்பு**
அ. பிருந்தா
இரண்டாமாண்டு - உயிர்த்தொழில்நுட்பவியல் துறை

# கோபம்

ஏய் கடலே!!
உனக்காக இன்னும் காத்திருக்கிறோம்!
உன் அழகைக்காண அல்ல!

நாம் அழ அழ
நீ எடுத்துச் சென்ற உறவுகளின்
உடல்களைக் காண!
தருவாயா திரும்ப
அலையே வா!

ஆனால் எல்லை தாண்டாதே!
வாசலில் நில்!
எங்கள் பாசங்களைப் பறிக்காதே!
பாசாங்கு செய்யாதே!

பாவிக் கவிஞர்களே!
பாடுவதை நிறுத்துங்கள்
இந்தப் பாழாய்ப்போன அலையை!

ஆடும் அலையே
இன்று நீ
எமை ஆடவைத்துவிட்டாய்
உன் நத்தார் பரிசு
நம் உயிர்தானோ...?

பெ.திவ்யபாரதி
முதலாமாண்டு - கணினி பயன்பாட்டு அறிவியல் துறை - பி பிரிவு

# இகரம்

இகரத்தின் மீது உனக்கு ஏன்
இத்தனை கோபம் ஆழிப் பேரலையே
இந்தோனேசியா, இலங்கை, இந்தியா
எனச் சூரையாடி இருக்கிறாய்
அடுத்து...............?

ஆர்.பத்மாவதி
முதலாமாண்டு- துகிலியல் மற்றும் ஆடை வடிவமைப்புத்துறை

# உலக எய்ட்ஸ் தினம்

## பாதுகாப்பின் அவசியம்

உலகை அச்சுறுத்தி வரும் கொடிய தீவிரவாதி
இதுவே உலகின் தீராத வியாதி!
இதனால் உன் உடல் எடை குறையும் பாதி
அதனால் விழிப்புணர்வுடன் செயல்படுவதுதான்
நியதி நியதி நியதி....



பாதுகாப்பு இல்லாத உறவு முறை அதைத்
தவிர்த்திடப் பழகு பலமுறை
பாதுகாப்பாக இருக்க அணிய வேண்டும்
குறியுறை!!!
இதுவே சட்டத்தின் வழிமுறை
இதைப் பின்பற்றி நடப்பதே மனிதனின்
வழிமுறை!!!

சி.ரகுராம்
இரண்டாமாண்டு - உயிர்த்தொழில்நுட்பவியல் துறை - அ பிரிவு

# ஊனமுற்றோர் தினம்

உறுதியாய் இரு!
ஊனம் என்பது ஒரு தடையல்ல!
உன் வாழ்வின் முன்னேற்றத்திற்கு
இறைவன் அளித்த கொடை!
உழைப்பும் தன்னம்பிக்கையும்
உன்னிடம் உறுதி!
இது இந்த உலகமே
காண்கிற நியதி!
உறுதியாய் நிற்கின்றது
உன் மனம்!
உலகமே புகழும்
உன்னைத் தினம் தினம்!
மாற்றுத் திறனாளி தோழனே!
ஊனம் என்பது தடையல்ல!
நாங்களும் மாறத்தான் ஆவல்
உன்னைப் பார்த்து!...
உடல் குறை என்று
எண்ணி விடாதே!
முயற்சி என்னும் ஏணிகளை
உன் முன் வைத்து
தன்னம்பிக்கையுடன் முன்னேறு
உன் உள் மூச்சு
நிற்கும் முன் நீ
வென்றிருப்பாய் நிச்சயமாய்...




**தொகுப்பு**
தி.ஸ்ரீலேகா
இரண்டாமாண்டு - உயிர்த்தொழில்நுட்பவியல் துறை

# உலக மாசு தினம்

## சந்ததியைக் காப்போம்

சுத்தி சுத்தி வருகுதே பூமி
சுத்தம் பத்தம் காத்த நாம்
அதன் சூழல் தனை காப்போம்...

சூழல்தனைக் காக்க மறந்தால்
சுடு காடாய் மாறிடுமே!
இயற்கை எழில் கொஞ்ச இப்பூமி
ஆறு, ஏரி, குளம், குட்டையென
நீர் நிலைகளைக் காக்காமல்
வாழ்ந்தால்
நீயும் நின் வரும்கால சந்ததியும்
இத்தரணியில் தண்ணிக்கு
ஏங்கித் தான் நிற்க வேணும்...

மா. மலர்கொடி
இரண்டாமாண்டு - உயிர்த்தொழில்நுட்பவியல் துறை

## பாதிப்பு

காவேரி அன்னை கரை படிந்துபோய் இருக்கிறாள்
கங்கை மாதா சிறகு உடைந்துபோய் இருக்கிறாள்

பாலாறு பாழாகி; வைகையும் மாசுபட்டு
நாடே தீப்பற்றி எரிய
வளர்ந்துவிட்ட பாரதத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம்
என்ற நினைப்பால்
நாளுக்கு நாள் நாம் நமது அழிவை

தேடிக் கொண்டிருக்கிறோம்...

மரத்தை வெட்டி நாற்காலி செய்து
அதில் அமர்ந்து தேடுகிறான்...
மரத்தின் நிழலை! வெட்டுண்ட
மரம் அழுது கொண்டே சொன்னது
பாதிப்பு என்னைவிட உனக்குத் தான்
அதிகம் என்று................

**தொகுப்பு**

சே.சாந்திபிரியங்கா

இரண்டாமாண்டு - உயிர்த்தொழில்நுட்பவியல் துறை

## உலக மனித உரிமை நாள்

உலக மனித உரிமை நாள்
உலகம் அறிய வேண்டிய நாள்!

உலக மனித உரிமை நாள்
உள்ளங்கள் உணர வேண்டிய நாள்!

அத்து மீறல் உச்சத்தைத் தொட்டால்!
அனைத்துலகம் இணையும் நாள்
தனிமனித உரிமை பறிக்கப்பட்டால்
தரணியே பொங்கி எழ வேண்டிய நாள்!

இனம் ஒன்று அழிக்கப்பட்டால்
இதயங்கள் ஒன்றிட வேண்டிய நாள்!

கருப்பு இனம் ஒடுக்கப்பட்டதால்
பொங்கிய கருப்பு வைரம்
மண்டேலாவுக்கு வீர வணக்கம்
கூறும் நாள்!

தனிமனிதனின் உரிமை பறிக்கப்பட்டால்
தரணியே பொங்கிஎழ வேண்டிய நாள் இது!

கி.நிவேதா
முதலாமாண்டு - கணினி பயன்பாட்டு அறிவியல் துறை - பி பிரிவு

## உலக அமைதி நாள்

### அமைதி எப்போது?

அடுத்தடுத்த போர்களின் இடையே
கிடைத்த இடைவெளியை
அமைதியென்று போற்றுகிறோம்!

அமைதி ! ஆம்....இந்த
அமைதியும் கூட
அடுத்த போருக்கான ஆயத்த
காலமாகிறது!

கொள்கைக்களுக்காகப் போர் புரிந்த
நாம்,
இன்று எல்லைகளுக்காக
போரிடுகிறோம்!

கடவுளின் பெயரைச் சொல்லி
எண்ணிடலங்கா
கொலைப் பாதகங்களை
அரங்கேற்றியுள்ளோம்!
இங்கே!

எனது உயிரின்
நறுமணத்தைப் பருகி

உணவுக்கு அரை மணி நேரம் முன் பழம் சாப்பிடலாம். அல்லது
உணவு சாப்பிட்ட 2 மணி நேரம் கழித்துப் பழங்களைச்

வாழ்வின் பேரானந்தத்தை
உணர்ந்திடுங்கள்!...
தொகுப்பு

**தொகுப்பு**

எஸ்.நிவேதா
இரண்டாமாண்டு - உயிர்த்தொழில்நுட்பவியல் துறை

## வெள்ளைப் புறா



அமைதிக்குச் சின்னம் வெள்ளைப் புறா
இன்று கூண்டில் சிறைக் கைதியாய்
அமைதிக்கு வழி செய்த தலைவர்கள்
இன்று சுவற்றில் புகைப்படமாய்.....!
தோழமை கொண்ட தேசங்கள்
இன்று ஆயுதம் சேர்க்கும் போட்டியில்
உலகத்தைக் காக்கும் மகா நாடுகள்
இன்று கொள்ளைக் கூட்டத்தின் மறுபெயர்கள்...
நண்பர்கள் கூடி பொழுது கழிக்க
உலக விஷயமோ பேச்சுப்பொருள்
சிறுவர்கள் கண்டு மகிழ
இன்று வெள்ளைப்புறாவோ ஒரு காட்சிப்பொருள்....!
புத்தனின் மௌனத்தில்
ஒளிந்து கிடக்கிறது
உலக அமைதி...!

லோ. ராஜேஸ்வரி
இரண்டாமாண்டு - உயிர்த்தொழில்நுட்பவியல் துறை

# உலக விவசாயிகள் தினம்

## உழவனின் சிறப்பு

**அ**ரைவயிறு நிறைந்தால் போதும்...
**ஆ**ண்டவன் துணை மட்டும் வேண்டும்....
**இ**யற்கையின் பிள்ளைகள் ஆனோம்..
**ஈ**ன்ற மக்களாய் பயிர்களை எண்ணினோம்..
**உ**ழவே எங்கள் உயிர் என்றோம்..
**ஊ**ர்க்கே உணவு அளிக்க மட்டும் வாழ்ந்தோம்..
**எ**ருதுகளே எங்கள் தோழர்கள் என்றோம்..
**ஏ**ழை என்பதால் ஏமாற்றம்..
**ஐ**ம் பொழுதும் உழைத்துக் களைத்தோம்..
**ஒ**ருநாளும் இத்தொழிலை விட மனமில்லை..
**ஓ**ய்வு என்று ஒன்று இல்லை என்றாலும்...
**ஔ**வை தமிழுக்கு நாங்கள் உழவிற்கு...!

நா.மு.சு.கோகுல்
இரண்டாமாண்டு - உயிர்த்தொழில்நுட்பவியல் துறை

## எதார்த்தம்

வைகறையில் ஆரம்பிச்சி மாலையும் தா வந்தாலும்
சோறு தண்ணீர் இல்லாமல் வயலுல நீர் பாய்ச்சி
படி படியா நெல் அள்ளி
சோறு போடும் உழவனே
உனக்கு கைமாறு என்ன செய்யப்போறேன்னு தெரியல
அடுத்த ஜென்மம்னு ஒன்னு இருந்துச்சினா
நான் உழவனாப் பிறந்து

என்ன போல வாழும் ஏழைப்பாழை மக்களுக்கு
சோறு போட கடவுளிடம் வேண்டுவேன்!!!

ரா. சிந்துஜா
இரண்டாமாண்டு - உயிர்த்தொழில்நுட்பவியல் துறை

## வாழும் தெய்வம்

பூமி அன்னை ஆடையாய் அணிய
பசுமை வயலை விளைவித்த விவசாயிகளே...
பிரம்மன் உயிரைப் படைத்தான்
உயிர்வாழ... நீங்களோ உணவைப் படைத்தீர்கள்
நீ அல்லவோ பிரம்மன்...!
பாலை நிலமும் பசுமையாய் மாற
பாடுபட்ட பாட்டாளி விவசாயிகளே
உன் கையில் விதைகளைத் தந்தால்
விளை நிலமாய் மாற்றிய மாந்தர்குல தெய்வங்களே...!
வயிற்றில் ஏற்பட்ட தீ எனும் பசி
பறந்தோட அன்னையாய் அன்னமிட்ட
ஆருயிர் கடவுளே..!
வயலின் நிலை அறிந்து குழந்தையால்
உருவாக்கி, உடல் மெலிந்த ஊரை
ஊட்டமாக்க உதவிட்ட மாமன்னர்களே...!
பச்சிளங்குழந்தைக்கு பாலூட்ட
பசுமாட்டை படைத்தான் இறைவன்
உலகில் பிறந்த இந்தப் பாவி மக்களுக்கு
பசியைப் போக்க உங்களை படைத்தான்...!
காலங்கள் மாற கலைஞர்கள்



பல திசைகளாய் பிரிய
காலங்கள் அழிந்தாலும்
கைவிடாப் பிடியாய்
விவசாயத்தை வைத்திருக்கும் வித்தகர்களே...!
இன்றளவும் மக்கள் கடவுளுக்கு
பல ஊருவத்தை உருவாக்கி வணங்குகின்றனர்..
நீயே ஒரு வாழும் தெய்வம்
மற்ற தெய்வங்கள் உனக்கு ஒப்பாகது..!
நீயே உயிரை உருவாக்கும்
தெய்வமாய் விளங்குகிறாய்
என்றும் தொழில் பெருக
நீ என்றும் வாழ்க...!

எஸ்.ராகுல்ராஜ்
துகிலியல் மற்றும் ஆடை வடிவமைப்புத்துறை - முதலாமாண்டு

## கானல் நீர்


கழனியில் முளைத்த
களைய வேண்டிய
களைகளாய் கட்டிடங்கள்
களைய முடியாமல்
இன்றைய விவசாயிகள்...!

சேறை சோறாக மாற்றும்
வித்தை தெரிந்தும்
விவசாயத்தில்
பாதம் பதிக்க முடியாமல்
இன்றைய விவசாயி...!

தன்னிலை மறந்து
நண்பகல் வெயிலில்

கழனியின் நடுவில்
கலப்பை பிடிக்கும்
துணிவு இருந்தும்
துணிச்சல் இல்லாமல்
இன்றைய விவசாயி...!

கழனியின் மகள்
நாற்று வளர்ந்து
பருவப் பெண்ணாய்
தலை சாய்க்கும்
நெற்கதிரைக் காண முடியாமல்
இன்றைய விவசாயி..!



காலனின் குறிப்பறிந்து
விளைச்சல் கண்டவன்
மாறி வரும் கலியுகத்தால்
விவசாய வளர்ச்சி காணாமல்
இன்றைய விவசாயி...!

மலடியின் கனவில்
ஒரு சுகப் பிரசவமாய்
விவசாயியின் கனவில்
அமோக விளைச்சலாம்...!

கனவு காணும்
இன்றைய விவசாயி...!

கானல் நீரில் தாகம்
தணித்துக் கொண்டு
இன்றைய விவசாயி...!

விளைநிலத்தின் அருமை

விலை போகும் நிலமாய்
விளைச்சல் தெரியாமல்
விவசாயத்தை வீழச்செய்த
வியாபாரப் பைத்தியங்கள்
மானுடப் பணப் பைத்தியங்களை
திருத்த முடியாமல்
இன்றைய விவசாயி...!

மு.ஹபீப்ரகுமான்
துகிலியல் மற்றும் ஆடை வடிவமைப்புத்துறை - முதலாமாண்டு

## வயல்வெளி

காணும் இடம் எல்லாம் பச்சை நிறம்
இதை வருணிக்க தோன்றுதே
என் நெஞ்சின் ஒரு புறம்
பூக்களின் வண்ண நிறம்
வண்ணத்துப்பூச்சியை கவரச் செய்ததே...!
இயற்கையின் அழகை ரசிக்கச் செய்ததே...!
இந்த இயற்கையின் மடியில்
என்னைத் தவழச் செய்ததே....!

எஸ்.ஜெனிதா
முதலாமாண்டு - வேதியியல் துறை

## வாழும் தெய்வம்

அழகான சமூகம்
நம்முடையது
அதில் இயற்கை தான்
நமக்குக் கிடைத்த வரம்

அதையும் நீ அழிக்க அழிக்க...
அழியப் போவது
இயற்கை அல்ல..
.நீ தான் மனிதனே...!

ஆர்.அருண்குமார்
முதலாமாண்டு - வேதியியல் துறை

## களைப்பறியா உழைப்பாளி

வேளாண்மை
புராதனத் தொழில் - இன்று
புறக்கணிக்கப்பட்ட தொழில்
காய்ந்து வெடித்த
வயல் வெளிகளும் - அதனால்
அழுது அழுது
ஓய்ந்து துடித்த
கயல் விழிகளுமாய்
முப்போகம் விளைந்த பூமி - இனி
எப்போது விளையும் என்ற
ஏக்கப் பெருமூச்சு விடும்
உழவர்களின் வாழ்க்கை!

வேளாண்மை செய்பவனை
மேலாண்மை செய்பவன்
மிதிக்கிறான்.
மேலாண்மை செய்பவனை
வேளாண்மை செய்பவன்
துதிக்கிறான்...!

நீர்வீழ்ச்சியை இரசிக்கலாம்

வேருக்கு வீழ்ச்சியென்றால்
எப்படியடா ரசிப்பது...?
தானியம் இல்லையென்றால்
சூனியம் தானடா!

கலப்பைகள் கூடக்
கவலை கொள்ளும் - இவர்
களைப்பறியா உழைப்பு கண்டு!

செ. பிரியா
துகிலியல் மற்றும் ஆடை வடிவமைப்புத்துறை - முதலாமாண்டு

## இயற்கை விவசாயம்

வெண்முகில் ஒன்றிணைந்து கருத்து நின்றது
மண்ணின் விழியம்புகள் வானத்திற்குச் சென்றது
காற்றின் திசையில் மேகங்கள் கலையுமோ...?
வற்றிய நிலத்தில் மழை பொழியுமோ...?
அளவுக்கு விஞ்சிய மழை நீரில்
அனைத்துப் பயிர்களும் அழுகிவிட்டதே
அன்றிலைவிட அதனிடத்தில் அன்பு கொண்டதால்
அவனை அறியாமலே கண்ணீர் வீழ்ந்ததே...
விழிநீர் மழையில் வளருமோ...?
வியர்வைத் துளிகளும் உதிரங்களாய்ச் சிதறுமோ..?
விளைச்சல் இல்லாது இளைத்துப் போகிறான்...
விடியும் பொழுதிலும் இருளில் மூழ்குகிறான்...

**தொகுப்பு**

ஆர்.சசிக்குமார்
இரண்டாமாண்டு - உயிர்த்தொழில்நுட்பவியல் துறை

## பொதுக் கவிதைகள்

### Chemistry makes life

Life is like chemistry
Dilute your stubbornness
Evaporate your worries
Filter your mistakes
concentrate your contidance
Ultimately we get
Crystals of love, Joy and happiness
Life is like physics
Life is nothing but a
Simple pendulum oscillate
Between ups and downs

by
R.Venkatesh
I-BSc Chemistry

### உண்மை

சுமைகளைக் கண்டு நீ
துவண்டு விடாதே
இந்த உலகத்தைச்
சுமக்கும் பூமியே
உன் காலடியில்

டி.நர்மதா
முதலாமாண்டு-மின்னணு மற்றும் தகவல் தொடர்பியல் துறை

## அ முதல் ஒள வரை...

**அ**ம்மா அப்பா மடிப்பிறந்து
**ஆ**சான் ஆண்டவன் அனைவரையும்
**இ**தயத்தில் நிறுத்தி, இரந்தவர்க்கு
**ஈ**ட்டியதைக் கொடுத்து உதவி,
**உ**லகம் போற்றும் உத்தமராய்
**ஊ**ரோடு ஒத்து வாழ
**எ**ண்ணத்தைத் தூய்மையாக்கி
**ஏ**ற்றம் பெற உழைப்போம்!
**ஐ**யத்தை எச்சம் இன்றி
**ஒ**துக்கி வைத்து விட்டு
**ஓ**ங்கி வாழ்வில் உயர்ந்திடவே
**ஔ**வையின் நல்வழி நடப்போம்!!!

ஆர்.வெங்கடேஷ்
முதலாமாண்டு-வேதியல்துறை

## மழையின் அழகு

சாரல் மழையில் நனைந்த காற்று
தென்றலாய் சில்லிடுகிறது!
மழைநீர் கொட்டும் சத்தம்
புதியதொரு இசை அமைக்கிறது!

மலர்களெல்லாம் நீரில் நனைந்தது
தலையாட்டிப் புன்னகைக்கிறது
எல்லோர் மனமும்
மழையில் நனையவே
மன்றாடிக் கெஞ்சுகிறது

பலமைல் தூரம் கடந்துவரும்
இந்த நீர்த் துளிகள்
தேவனின் தீர்த்தமாகவும் இருக்கலாம்!!

**தொகுப்பு**
செ. தீபிகா
இரண்டாமாண்டு - உயிர்த்தொழில் நுட்பவியல் துறை - அ பிரிவு

## இயற்கை

பிறப்பும் இறப்பும் இயற்கை - பின்
ஏன் இடையில் இந்த செயற்கை"
எண்ணற்ற தத்துவம் புரியும் பார்
இயற்கை அன்னையின் - அழகைப்பார்!!!

வான்மழை பொழிவதும் இயற்கை
வரம் பல தருவதும் இயற்கை - கதிரவன்
உதிப்பதும் இயற்கை அதுதன் கடமையைச்
செய்வதும் இயற்கை!!!

இயற்கை என்றும் தீங்கில்லை
அதை அறிந்தவர்
வாழ்வில் துன்பமில்லை!!!

**ரா.சரண்யா**
**முதலாமாண்டு-மின்னணு மற்றும் தகவல் தொடர்பியல் துறை**

## இனிய மழையே!

இசை தெரியாத என்னை கூட
இதழ் அசைக்க வைக்கிறது
உன் நடனம் உயிருக்குள் சென்று சிலிர்க்க வைக்கிறது

உன் தீண்டல் என்னை எங்கோ அழைத்து செல்கிறது
உன் வருகையின்போது வரும் வாசம்
என்னுள் எரியும் கோப தீயை கூட அணைத்து விடும் உன் அணைப்பு
இனி எப்போது வரப்போகிறாய் என் இனிய மழையே!!
என் தேடலில் தோன்றும் புத்துணர்ச்சி நீ
தீண்டும் வரை தொடரும் ஆவியாக மறைந்து
நீராகத் திரும்பி வரும் உன் மனம் பல
உயிர்களுக்கு உயிராக அமைகிறது என்
இனிய மழையே!!!!!!

வெ. சிந்துஜா
இரண்டாமாண்டு - உயிர்த்தொழில்நுட்பவியல் - அ பிரிவு

## நட்பு

பார்க்கிறேன் என்று
தள்ளிப்போதலுக்கும்
பழகுகிறேன் என்று
விலகுதலுக்கும்
இடைப்பட்ட புரிதலுக்குப் பெயர்
நட்பு...

பலரின் முகங்கள்
அறிந்திருந்தாலும்
துன்பத்தின் போதும்
இன்பத்தின் போதும்
மனம் தேடுவது அறிமுகமானவர்களின்
நட்பை மட்டுமே

வெ. தேவதர்ஷினி
முதலாமாண்டு - மின்னணு மற்றும் தகவல் தொடர்பியல்

உன் மௌன தண்டனை
எனக்கு சிறை தண்டனையை விட
கொடுமையைத் தருகிறது...
உன் அன்பிற்கு ஏங்குகிறது....
தீயினால் பட்டபுண் ஆறியது
மனதால் பட்டபுண் ஆறவில்லை....
சிறையில் அடைத்து வைத்த
ஒரு பறவையைப் போலத் தவிக்கிறே
உன் அன்பிற்காக...
உன்னையும் மீறி
உன் கண்கள் என்னிடம்
கண்கட்டி வித்தை செய்கிறது...
கண்மூடித் தனமாக உன்னை
நம்பினேன் நல்ல
நட்பாய் இருப்பாய் என...
கண்மூடி விட்டாய்
உன் மௌனத்தால் என்னை...
காற்றுடன் உன் பேச்சு
என் மூச்சில் கலந்து
பெரிய தண்டணையைத் தருகிறது...
மௌனமாகவே என்னைக் கொல்கிறது...
நீ என்னிடம் பேசவில்லை என்றாலும்
உன் மௌனங்களையும் மீறி
என்னிடம் கண்டேன்
உன் அன்பை...
இப்பொழுது,
ஏங்குகிறேன் உனக்காக...
என் கடைசி வரை



என்னுடன் இருப்பாயா நட்பாக...

மு.உமாராணி
முதலாமாண்டு - தமிழிலக்கியம்

## அம்மா



தாயே நான் பிறக்கும் வரை
என்னை கருவறையில் சுமந்தாய்
நான் பிறந்த பின் என்னை
உன் மன அறையில் சுமந்தாய்
தாயே நீ ஒரு பூ, அதில்
நான் என்றென்றும் தேனாக இருப்பேன்
தாயே நீ ஒரு பால், அதில்
நான் என்றென்றும் வெண்மையாக இருப்பேன்
தாயே நீ ஒரு விதை, அதில்
நான் மரமாக உதிப்பேன்
தாயே நீ ஒரு மரம், அதில்
நான் கிளையாக இருப்பேன்
என்றும், என் வாழ்நாள் முழுவதும்
நான் உன்னை சுமப்பேன்..

சி. சூர்யா
முதலாமாண்டு - தமிழிலக்கியம்

## கட்டுரை

## எய்ட்ஸ் விப்புணர்வு

**எய்ட்ஸ் ஒரு தீ நுண்மத்தால்(வைரசால்) பரவும் நோய்**

எச்.ஐ.வி எனும் வைரஸினால் தான் எய்ட்ஸ் ஏற்படுகிறது. வைரஸ் என்பதை நோயை உண்டாக்கக் கூடிய மிகச் சிறிய நுண்ணியிர் என்று

சொல்லலாம். பாக்டீரியா, பங்கஸ் போன்ற நுண்ணுயிர்களைச் சாதாரண நுணுக்குக்காட்டி மூலம் பார்க்கலாம். சாதாரண நுணுக்குக்காட்டி மூலம் காணமுடியாத அளவிற்கு வைரஸ் மிகச்சிறியது. இதனை மிகவும் சக்கி வாய்ந்த இலத்திறன் நுணுக்குக்காட்டி மூலமே பார்க்க முடியும்.

**எய்ட்ஸின் வரலாறு**

ஜீன் 5,1981 அன்று அமெரிக்காவைச் சேர்ந்த நோய்கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் சி.டி.சி, ஆண் ஓரினச் சேர்க்கை கொண்டிருந்த ஐந்து நபர்களிடம் ஒரு அரிய வகை நிமோனியாவைக் கண்டறிந்தது ஒரு அறிக்கையை வெளியிட்டது. இந்த அறிக்கையே எய்ட்ஸ் கண்டறியப்பட்டதாக வெளியிட்ட முதல் ஆவணம் ஆகும். எய்ட்ஸ் முதலில் ஓரினச்சேர்க்கைப் புற்றுநோய் என்றும் அழைக்கப்பட்டது. இவ்வாறாக எய்ட்ஸ் 1981 ஆம் ஆண்டிலேயே கண்டறியப்பட்ட போதிலும், அதை உண்டாக்கும் வைரஸ் கிருமி 1983-ஆம் ஆண்டிலேயே இனங்காணப்பட்டது.

HIV வைரஸில் இரண்டு உப பிரிவுகள் இருப்பதாக இப்பொழுது நம்பப்படுகிறது. ஆரம்பத்தில் அமெரிக்க உட்பட மேற்கத்தைய நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டதை HIV என்றும், பின்பு மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் கண்டு பிடிக்கப்பட்ட புதிய உப பிரிவை HIV-II என அழைத்தனர்.

**எய்ட்ஸ் அறிகுறிகள்**

அறிகுறிகள் HIV பாதிப்புக்குள்ளான பலரிடம் ஆரம்ப நிலையில் அதற்கான அறிகுறிகள் தெரிவதில்லை. இருந்தபோதிலும் சிலரிடம் இது ஃப்ளூ சுரமாக வெளிப்படுகிறது. அதுவும் இந்த வைரஸ் மூன்று முதல் ஆறு வாரங்களுக்கிப் பிறகே தெரிகிறது.

இந்தத் தீவிர HIV பாதிப்பினால் ஏற்படும் உடல்நலக்குறைவு, காய்ச்சல், தலைவலி, உடல் சோர்வு, குமட்டல், வியர்வை, நடுக்கம்,

வயிற்றுப் போக்கு, நெறிகட்டுதல் போன்றவற்றினைத் தோற்றுவிக்கிறது. இந்த அறிகுறிகள் கூட HIV தொற்றிய ஒருசில நாட்களில் தெரிவதில்லை. மேலும் இது, ஆரம்ப நிலையில் வேறு ஏதோ ஒரு வைரஸ் என்று தவறாகவே இனங் காணப்படுகிறது. எனவே, ஆரம்ப நிலையில் HIV தொற்றைக் கண்டுபிடிப்பது கடினமாகும்.

**எயிட்ஸ் தெரிந்துகொள்ள வழி**

HIV தொற்றடைந்தோர் நீண்டகாலம் செல்லும் வரை எவ்வித நோயறிகுறிகளையும் வெளிக்காட்டுவதில்லை. எனவே, புறத்தே தென்படும் பண்புகளைக் கொண்டு அவர்களை இனம்காண முடியாது. எச்.ஐ.வி தொற்றடைந்த்துள்ளோரை இனம் காணப்படுவதற்கு மிகச் சிறந்த முறை அவர்களது இரத்தத்தில் அடங்கியுள்ள எச்.ஐ.வி பிறபொருளெதிரிகளை இனம் காண்பதாகும். இதற்காக, இரண்டு வகை இரத்தச் சோதனைகள் நடத்தப்படுகின்றன.

**எய்ட்ஸ் நோயாளிகளும் மனிதர்களே**

எய்ட்ஸ் நோயாளிகள் சமூகத்தின் பார்வையில் பொதுவாக வேண்டப்படாதவர்களாகவே கருதப்படுகின்றனர். இது தவறு ஒரு எயிட்ஸ் நோயாளியைப் பொறுத்தமட்டில் தகாத பாலுறவால் மாத்திரம் நோயைப் பெற்றிருப்பர் என்று கூற முடியாது. வேறு சில சந்தர்ப்பங்களிலும் இந்நோய் தொற்றலாம். எனவே, எயிட்ஸ் நோயாளிகளைச் சாதாரண மனிதர்களாகக் கருதி அவர்களுக்கு உரிய உரிமைகளையும், சலுகைகளையும் வழங்க வேண்டியது சமூகத்தின் கடமையாகும். சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்களே. அனைவருக்கும் சம உரிமைகள் உண்டு. பிறப்பு, பால், இனம், மதம் முதலிய வேறுபாடுகளின்றி பாதிக்கப்பட்டவர்கள் என்பதற்காக அவர்களுக்கு இந்த உரிமைகள் மறுக்கப்படக் கூடாது.

**தொகுப்பு**

பா.மோகப்னபிரியா

முதலாமாண்டு - கணினி பயன்பாட்டு அறிவியல் துறை - பி பிரிவு

## சிறுகதைகள்

### வெற்றி நிச்சயம்

முருகன் என்பவன் ஊனமுற்றவன். அவன் குடும்பம் மிகவும் வருமையால் வாடும். காரணம் அவன் தாய் மட்டும் வேலைக்கு சென்று கொண்டு இருக்கிறாள். அவன் தந்தை குடித்து திரிபவர். இருப்பினும் முருகன் 10ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கிறான். அவன் அவனுடைய குடும்பம் படும் கடும் வறுமை காரணத்தினால் விடுமுறை நாட்களில் கூட வேலை செய்து அந்தப் பணத்தை அவன் அப்பாவிடம் கொடுப்பான். முருகனுக்கு மூன்று நண்பர்கள் உள்ளனர். ராமு என்பவன் மிகவும் பணமுடையவன். தோழி அமுதா. இவளும் பணக்காரிதான். இவர்களிருவரைத் தவிர சோமு என்கிற ஏழை நண்பனும் ஒருவன் உள்ளான். பணக்கார நண்பர்கள் இருவருமே முருகனை ஏழையாகத்தான் பார்த்தார்கள். ஊனமுற்றவன் என்றும் பழித்துக் கொண்டும் இருப்பர். ஆனாலும் முருகன் அதனைக் கண்டு கொள்ளாமல் தனது குடும்ப சூழ்நிலையைப் புரிந்து கொண்டு படித்துக் கொண்டே இருந்தான். அதனைக் கண்ட சோமுவும் வகுப்பு ஆசிரியரும் உதவி செய்தனர். சோமுவும் முருகனும் ஒருவருக்கொருவர் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டு படித்தார்கள்.

இருவரும் நன்றாகப் படித்தனர். இருப்பினும் நண்பர்கள் இவர்களைக் கிண்டல் கேலி செய்து கொண்டே இருந்தார்கள். முருகனின் அப்பா வேலு இவன் படிப்பை நிறுத்தி வேலைக்குச் செல்லச் சொன்னார். அவர் குடிப்பதற்காக. ஒரு நல்ல தந்தையாக இருந்திருந்தால் அவனைப் படிக்க வைத்திருக்க வேண்டும். அதனைச் செய்யாமல் முருகனின் அப்பா குடித்துக் கொண்டு இருந்தாள்.

ஆனால், முருகனின் அம்மா, அவன் படிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறாள். முருகனின் முயற்சியைக் கண்டு அவனது ஆசிரியர்

இரவு பகல் பாராது பாடத்தைச் சொல்லிக் கொடுத்தார். பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வும் முடிந்தது. தேர்வு முடிவு வந்தது. முருகனும் சோமுவும் நல்ல மதிப்பெண் பெற்றார்கள். இவர்களை அவமானப்படுத்திய நண்பர்கள் எல்லோரும் தான் செய்தது தவறு முருகனை ஊனமுற்றவன் என நினைத்தது தவறு என எண்ணினார்கள். முருகன் எல்லோருக்கும் முன்னோடியாகத் திகழ்ந்தான். இவனுக்குச் சொல்லிக் கொடுத்த ஆசிரியருக்கும் பெருமை.

இதனை உணர்ந்த முருகனின் அப்பா குடியை நிறுத்திவிட்டார். முருகனை மேலும் படிக்க வைக்க வேண்டும் என எண்ணினார். முருகனை ஏளனமாக நினைத்த அனைவரையும் அவன் திரும்பிப் பார்க்க வைத்தான்.

செ.நவீன்குமார்

முதலாமாண்டு - கணினி பயன்பாட்டு அறிவியல் துறை - பி பிரிவு

## ஊனம் தடையல்ல

கதிரவன் உதிக்கும் நேரம். இருள் நீங்கிக் கதிரவனின் கதிர்கள் கிராமம் முழுக்க பரவுகின்றன. அந்த கிராமத்தில் சூரியா என்பவன் வசித்து வந்தான். அவனுக்குச் சொல்லும் படியாகபடிப்பும் வேலையும் இல்லை. ஏனெனில் அவன் உடம்பில் கை ஒன்று இல்லை. அதனால் அவனுக்கு வேலை இல்லை. கிடைத்த வேலையைச் செய்து வாழ்வை நடத்தி வந்தான். ஒருநாள் அவன் வேலை தேடி சாலையோரத்தில் நடந்து சென்று கொண்டே தன் மனதில் நமக்கு கை இருந்தால் அனைவருக்கும் முடிந்த அளவு உதவி செய்யலாம் என நினைத்தான். அவன் உடம்பில் ஊனம் உள்ளதே தவிர அவன் மனத்தில் ஊனம் இல்லை. அவ்வளவு தைரியசாலி. வழியில் ஒரு மரத்தில் ஒரு குழந்தையைப் பார்க்கிறான். அந்தக் குழந்தை யார் குழந்தை என விசாரிக்க வேண்டும் என நினைத்துக் கொண்டு அருகில் செல்கிறான்.

அங்கு குழந்தை மரத்தில் பழங்களைப் பறிக்க முயற்சி செய்து கொண்டிருந்தது. அப்போது மரக்கிளையில் பாம்பு ஒன்று வந்தது. அதைப் பார்த்த அக்குழந்தை மரத்தின் மீதிருந்து கீழே விழுந்தது. அருகில் சென்ற சூர்யா அக்குழந்தையைப் பிடிக்க தனது கையை நீட்டினான் தனக்கு கை இல்லை என்பதை மறந்து. அவனது முயற்சி பலிக்காமல் போக குழந்தை கீழே விழுந்தது.

கீழே விழுந்த குழந்தைக்கு பலத்த காயம் ஏற்பட்டு இரத்தம் சிந்திக் கொண்டிருந்தது. இதைக் கண்ட சூர்யா தனது பிரிதொரு கையின் உதவியுடன் அக்குழந்தையைத் தூக்கிக் கொண்டு மருத்துவமனையை நோக்கி ஓடிச் சென்று அக்குழந்தைக்கு சிகிச்சை செய்ய வலியுறுத்தினான். அப்போது மருத்துவமனையிலிருந்த பொதுமக்களும் மருத்துவர்களும் இவனது செயலை வெகுவாகப் பாராட்டினார்கள்.

**ஊனத்தை உடம்பில் வைத்துள்ளவர் பலர். ஆனால் மனதில் வைத்துள்ளவர்கள் சிலர் மட்டுமே. ஆகவே, ஊனமுற்றவர்களை மதிப்போம்.**

எம்.வடிவேலு

முதலாமாண்டு - கணினி பயன்பாட்டு அறிவியல் துறை - பி பிரிவு

## விவசாயியான மென்பொருளாளன்

ஓர் கிராமத்தில் தர்மா என்ற விவசாயி தன் குடும்பத்துடன் வசித்து வந்தார். அவருடைய மகன் மிகப்பெரிய மென்பொருள் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தான். அவனுக்குப் பணத்தின் மீது அதிக மோகம் வந்தது. இதன் விளைவு தன்னுடைய கிராமத்திற்கு வந்து தந்தையின் நிலங்களை முடிவு செய்தான். அவன் தன் தந்தையிடம் தன்னுடைய விருப்பத்தைக் கூறுகிறான். அதற்கு அவனது தந்தை மறுப்புத் தெரிவிக்கிறார்.

மறுப்புத் தெரிவித்ததோடு மட்டுமின்றி வெலிநாட்டு மோகம் எல்லம் கொஞ்ச நாளுக்குத்தான் உன் வேலையை இழந்தால் என்ன செய்வாய்? எனக்கேட்டர். ஆனால், அவன் எதையும் கருத்தில் கொள்ளாமல் நிலத்தை விற்கும் முயற்சியில் ஈடுபடுகிறான். அந்த ஊரில் உள்ள பண்ணையார் இவனது நிலத்தை வாங்க சம்மதிக்கிறார். தர்மாவிற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

அன்று காலை தர்மாவின் மகன் எதேச்சையாக செய்தித்தாளை எடுத்துப் புரட்டுகிறான். அப்போது அதில் விவசாயத்தை விஞ்ஞான முறையில் செய்தால் கிடைக்கும் வருவாப் பற்றிய செய்தியைப் படித்தான். படித்ததும் தன்னுடைய எண்ணத்தை முழுவதும் மாற்றிக் கொண்டான். தன்னுடைய வேலையை உடனே ராஜினாமா செய்துவிட்டு நிரந்தரமாக விவசாயம் செய்யும் பணியை மேற்கொண்டான்.


அவனுடைய தந்தையும் மகிழ்ச்சி அடைந்தார். விவசாயம் செய்வதற்காக பயிர்க்கடன் வாங்க வங்கிக்குச் சென்றான். அங்கு அவனுக்கு மிஞ்சியது அவமானம் மட்டுமே. பணமும் இல்லை ஒன்னும் இல்லை என்று. ஆனால் அரசு அப்போது தான் பயிர்க்கடன் வழங்க ஆணை பிறப்பித்திருந்தது. அந்தப்பணத்தையெல்லாம் முறைகேடாக அரசு ஊழியர்கள் பயன்படுத்தியதை தர்மாவின் மகன் அறிந்தான். உடனே மக்களைத் திரட்டி பெரும் போராட்டத்தை நடத்தினான்.


விவசாயிகளின் செயல்களைக் கண்ட அரசு அந்த ஊரில் ஊழல் செய்த அரசு அலுவலர்களை பணி நீக்கம் செய்து உத்தரவிட்டதோடு மட்டுமல்லாமல் அனைவருக்கும் பயிர்க்கடனை வழங்கியது. அனைத்து விவசாயிகளும் தர்மாவின் மகனைப் போற்றினார். பிறகு தன் தந்தையின் மூலம் அனைத்து விவசாயத்தையும் கற்றுக் கொண்டு சிறப்பாக வாழ்ந்தான்.


ஆ. விஜயக்குமர்

முதலாமாண்டு - கணினி பயன்பாட்டு அறிவியல் துறை - பி பிரிவு



BROTHER
&
SISTER
TO SAVE OUR
MOTHER (NATURE)!


SAVE THE NATURE




பாரதியார்


by: F. Sulaimaan.
III. B.A (Tamil)


2050
விவசாயத்திற்கு உழைப்போம்!
1950
மனிதஇனத்தை காப்போம்!